www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

3RS

# மூன்றாம் திருப்புதல் தேர்வு - 2023

10 - ஆம் வகுப்பு

## தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

---

பகுதி - I

**சரியான விடையைத் தேர்ந்தெடு.** 15 X 1 = 15

1. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள் - இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது அ) இலையும் சருகும்
ஆ) தோகையும் சண்டும் இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்
2. பெரிய மீசை சிரித்தார் - அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது?
அ) பண்புத் தொகை ஆ) உவமைத்தொகை
இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை
3. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்
4. குலசேகர ஆழ்வார் 'வித்துக்கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால் சோற்றைக் கண்டதும் வருகிறார் - ஆகிய தொடர்களில் இடம் பெற்றுள்ள வழுவமைதி முறையே -
அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இட வழுவமைதி, மரபு வழுவமைதி
இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி ஈ) கால வழுவமைதி, இட வழுவமைதி
5. எய்துவர் எய்தாப் பழி - இக்குறளுக்குப் பொருந்தும் வாய்பாடு எது?
அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்
இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு
6. அருந்துணை என்பதைப் பிரித்தால் ........ .
அ) அருமை + துணை ஆ) அரு + துணை
இ) அருமை + இணை ஈ) அரு + இணை
7. ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர். இத்தொடரின் செயப்பாட்டு வினைத் தொடர் எது?
அ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர்
ஆ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.
இ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.
ஈ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றனர்.
8. 'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் -
அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் ஆ) மிகுந்து செல்வம் உடையவர்
இ) பண்பட்ட மனித நேயம் கொண்டவர் ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்
9. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும், பொருள்களின் இருப்பைக் கூட அறியமால் கொடுப்பவன் என்று பாராட்டப்படுவோர்
அ) உதியன் ; சேரலாதன் ஆ) அதியன் ; பெருஞ்சாத்தன்
இ) பேகன் ; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன் ; திருமுடிக்காரி
10. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கூறுவது?
அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

11. கம்பர் இராமாயனது வரலாற்றைத் தமிழில் வழங்கி எவ்வாறு பெயரிட்டார்?
அ) இராமாயணம் ஆ) இராமாவதாரம் இ) கம்பராமாயணம் ஈ) ஸ்ரீ ராம அயனம்

*பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.*

*"உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல் மூளச்*
*செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகார்ந்த*
*அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி*
*முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே!*

12. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
அ) உலகியல் நூறு ஆ) கனிச்சாறு இ) நூறாசிரியம் ஈ) மகாபுகுவஞ்சி
13. செந்தாமரை - இலக்கணக் குறிப்பு தருக.
அ) பெயர்ச்சொல் ஆ) பண்புத்தொகை இ) உவமைத் தொகை ஈ) உருவகம்
14. தும்பி - என்ற சொல்லின் பொருள்?
அ) புறா ஆ) நிலா இ) வண்டு ஈ) குருவி
15. இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) பாவாணர் ஆ) இளங்கோவடிகள் இ) பெருஞ்சித்திரனார் ஈ) கம்பர்

## பகுதி - II (பிரிவு - I)

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி. வினா. 21 கட்டாயமாக விடையளிக்கவும்.** 4 x 2 = 8

16. ***விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.***
அ) வித்துவக்கோடு என்னும் ஊர் கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டத்தில் உள்ளது.
ஆ) முல்லைப் பாட்டை எழுதியவர் நப்பூதனார்.
17. வேங்கை என்பதைத் தொடர்மொழியாகவும் பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
18. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?
19. தாய்மொழியும் ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுதுக.
20. ***கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.***
உழவர்கள் மலையில் உழுதனர்
முல்லைப் பூச் செடியைப் பார்த்தவாறே பாரதவர் கடலுக்குச் சென்றனர்.
21. 'கண்' - என முடியும் குறளை எழுதுக.

## பிரிவு - II

**எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க.** 5 x 2 = 10

22. மலைந்து - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
23. வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத் தொடர் அமைக்க. குறளின்பம்.
24. ***தொடரில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.***
அ) கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.
ஆ) கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.
25. ***கலைச் சொல் தருக.*** Thesis - , Patent -
26. அடிக்கோடிட்ட சொற்களின் தொடர் வகைகளை எழுதுக.
அ) <u>பழகப் பழகப்</u> பாலும் புளிக்கும்.
ஆ) ஆரிய <u>கவிதைகளின் தொகுப்பு</u> இது.
27. ***சொல்லைப் பிரித்துப் பார்த்துப் பொருள் தருக.***
கானடை (அ) வருந்தாமரை



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

28. ***உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.***
அ) சிலை மேல் எழுத்து போல (அ) ஆ) கண்ணினைக் காக்கும் இமை போல.

## பகுதி - III (பிரிவு - I)

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.** 2 x 3 = 6

29. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.

மகா கவியான பாரதியின் கவிதைகளும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தால் உலக அளவில் உயரிய விருதுகளும் ஏற்பும் கிடைத்திருக்கும். ஒரு நாடு எவ்வளவு மின்னாற்றலைப் பயன்படுத்துகிறது என்பதைக் கொண்டு அதன் தொழில் வளர்ச்சியை மதிப்பிடுவர். அதுபோல, ஒரு நாட்டின் மொழிபெயர்ப்பு நூல்களின் எண்ணிக்கையைக் கொண்டு அந்நாட்டின் பண்பாட்டையும் அறிவையும் மதிப்பிடுவர்.

அ) ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சியை எவ்வாறு மதிப்பிடுவர்?

ஆ) யாருடைய கவிதைகள் மொழி பெயர்க்கப்படாமல் உயரிய விருதும் ஏற்பும் பெறாமல் போனது?

இ) ஒரு நாட்டின் மொழிபெயர்ப்பு நூல்களின் எண்ணிக்கையைக் கொண்டு எவற்றை அறியலாம்?

30. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

31. வாளித் தண்ணீர், சாயக் குவளை, கந்தைத்துணி, கட்டைத் தூரிகை - இச் சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.

## பிரிவு - II

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி. (வினா எண். 34 கட்டாயமாக விடையளிக்கவும்)** 2 x 3 = 6

32. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.

33. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

34. 'விருந்தினனாக' என்ற தொடரும் காசிக்காண்டம் பாடலை எழுதுக. ***(அல்லது)***
"செம்பொன் ........ முதல் ...... பதிந்தாட வரை" முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ் பாடலை எழுதுக.

## பிரிவு - III

**எவையேனும் இரண்டனுக்கு விடையளி.** 2 x 3 = 6

35. தொழிற் பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடு யாவை?

36. 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது' - இக்குறட்பாவில் அமைந்த அணியை விளக்குக.

37. 'முயற்சி ஆக்கும் திருவினை முயற்றின்மை
புகுத்தி இன்மை விடும்" - இக்குறளில் முறைமாறியுள்ள சொற்களை சீர்படுத்தி, அலகிட்டு வாய்பாடு தருக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 5 x 5 = 25

38. அ) ஒழுக்கமுடைமை, மெய் உணர்தல் குறித்து வள்ளுவர் கூறுவன யாவை? ***(அல்லது)***
ஆ) இராமனுடைய மாநிற மேனியை அயோத்தியா காண்டம் கங்கைப் படலம் வழி கம்பர் எவ்வாறு வருணிக்கிறார்?

39. அ) "நான்கு திசைகளிலும் நான்" - என்று காற்று தன்னை எவ்வாறு வெளிப்படுத்துகிறது? ***(அல்லது)***
ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு விலை கூடுதலாகவும், தரமற்றதாகவும் இருந்தது குறித்து உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குப் புகார் விண்ணப்பம் ஒன்று வரைக.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com


www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

40. அ) செய்யுள் நயம் பாராட்டல்

*'நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்*
*நேர்பட வைத்தாங்கே*
*குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு*
*கோல வெறிபடைத்தோம்;*
*உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்*
*ஓட்டி மகிழ்ந்திடுவோம்;*
*பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு*
*பாடுவது வியப்போ?'* - மகாகவி பாரதியார். ***(அல்லது)***

**ஆ) கவிதையைத் தொடர்க.**

தண்ணீர் நிறைந்த குளம்
தவித்தபடி வெளிநீட்டும் கை
கரையில் கைபேசி படமெடுத்தப்படி
..........................
..........................
..........................



41. 9/51, வாழப்பாடி வட்டம், சேலம் மாவட்டத்தில் வசித்து வரும் வெங்கடாசலம் என்பாரின் மகள் தமிழரசி பத்தாம் வகுப்பை நிறைவு செய்து மேல்நிலை வகுப்பில் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை தமிழரசியாக எண்ணி சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

42. பள்ளியிலும் வீட்டிலும் உனது செயல்கள் எவ்வாறு இருக்கும் என வேறுபடுத்திக் காட்டுக. ***(அல்லது)***
The golden Sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milkey clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The beeze gently blows everywhere and makes everything pleasant.

**மாற்றுத்திறனாளிக்கான வினா.**

***சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க.***

1) முதல் இரண்டை நீக்கினாலும் நீக்காவிட்டாலும் வாசனை தரும்.
2) பழமைக்கு எதிரானது - எழுது கோலில் பயன்படும்.
3) இருக்கும் போது உருவம் இல்லை. இல்லாமல் உயிரினம் இல்லை.
4) நாலெழுத்தில் கண்சிமிட்டும் கடையிரண்டில் நீந்திச் செல்லும்.
5) ஓரெழுத்தில் சோலை - இரண்டெழுத்தில் வனம்.

***( காடு, புதுமை, விண்மீன், காற்று, நறுமணம்).***

## பகுதி - V

**அனைத்திற்கும் விடையளி.** 3 x 8 = 24

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக. ***(அல்லது)***
ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

44. அ) புயலிலே ஒரு தோனி கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும், அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும் பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன? ***(அல்லது)***
ஆ) கிடைத்தற்கரிய திருமந்திரத்தைப் பெற்ற இராமானுசர் - நாடகத்தை உன் சொந்த நடையில் கதையாக எழுதுக.

45. அ) 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை வரைக. ***(அல்லது)***
ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப்பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வை கட்டுரையாக்குக.
(முன்னுரை - காட்சியமைப்பு - துறை வாரியான அரங்கம் - மக்களின் பயன்பாடு - முடிவுரை)



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com